FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165107

1. District : Tirunelveli மாவட்டம் | PS: Vigilance and Anti Corruption காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No. 02/2026 மு.த.அ. எண் | Date: 03.06.2026 நாள்

2. (i) Act சட்டம்: PC Amended Act 2018 | Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 02.06.2026 | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 12.30 hrs | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.06.2026 | Time : நேரம் 08.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 03.06.2026 | Time : நேரம் 08.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Revenue Inspector office, Cheranmahadevi, Cheranmahadevi Taluk, Tirunelveli District. 23 Km West.
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr.E.Mookkandi | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.S.Esakki
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 20.04.1981 | (d) Nationality : நாட்டினம் INDIAN | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Mason | (g) Address : முகவரி 51, Lal Bahadur Shastri Street, Cheranmahadevi, Cheranmahadevi Taluk, Tirunelveli District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tmt.Ithayakani, Village Administrative Officer, Cheranmahadevi Village, Cheranmahadevi Taluk, Tirunelveli District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 03.06.2026-ம் தேதி காலை 08.00 மணிக்கு நான் (ப்.ராபின் ஞானசிங், காவல் ஆய்வாளர்) நிலைய பொறுப்பில் இருக்கும் போது திரு.இ.முக்காண்டி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் திரு.இ.முக்காண்டி மற்றும் குற்றம் சாட்டப்பட்ட திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தாலுகா, சேரன்மகாதேவி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் திருமதி.இதயகனி ஆகியோர்கள் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு, அவர்களின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனு மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து, அன்னாரின் அனுமதி பெற்று 03.06.2026-ம் தேதி காலை 09.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2026 u/s 7(a) of the PC Amended Act, 2018 ஆக வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் இ.முக்காண்டி, த/பெ.சு.இசக்கி, கதவு எண்.51, லால் பகதூர் சாஸ்திரி தெரு,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the Investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

3/6/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
3/6/26

15. Date & Time of despatch to the court: 03/06/2026 at 09.30 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P. Robin Gnanasingh
Rank: நிலை ..... No.என் .....
VAC, Tirunelveli.

சேரன்மகாதேவி, திருநெல்வேலி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, திருநெல்வேலி மாவட்டம். அய்யா, நான் சேரன்மகாதேவியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை மற்றும் விவசாய கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகிறேன். நான் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது மனைவி பெயர் நாகலெட்சுமி. அவள், சேரன்மகாதேவி, பாரதிதாசன் தெருவில் எங்களுக்கு சொந்தமான கதவு எண்.92 கொண்ட கட்டிடத்தில் சிவசக்தி பைனான்ஸ் என்ற பெயரில் பைனான்ஸ் நடத்தி வருகிறாள். மேற்படி பைனான்ஸ் நடத்துவதற்கு சேரன்மகாதேவி தாசில்தாரிடமிருந்து எனது மனைவி முறையாக உரிமம் பெற்றுள்ளாள். அது 31.03.2026-ம் தேதியுடன் முடிவடைந்தது. எனவே அந்த உரிமத்தை புதுப்பிக்க அவளது பெயரில் 29.05.2026-ம் தேதி சேரன்மகாதேவி தாலுகா அலுவகத்தில் உள்ள இ-சேவை மையத்தில் நான் விண்ணப்பம் செய்தேன். மேலும் நான் 14.05.2026 தேதியில் சேரன்மகாதேவி இணை-II சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.788/2026-ன் படி எனது மனைவி பெயரில் சுமார் 47 சென்ட் இடத்தினை சேரன்மகாதேவியை சேர்ந்த திரு.செல்லப்பா மற்றும் அவரது மகன் திரு.சுரேஷ் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றேன். மேற்படி இடத்திற்கான பட்டா பெயர் மாறுதல் வேண்டி 30.05.2026-ம் தேதி சேரன்மகாதேவி தாலுகா அலுவகத்தில் உள்ள இ-சேவை மையத்தில் நான் எனது மனைவி பெயரில் விண்ணப்பம் செய்தேன். இந்நிலையில் நான் 01-06-2026 அன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் எங்களது சிவசக்தி பைனான்சில் இருந்த போது எனது போனுக்கு (9092008594) சேரன்மகாதேவி வி.ஏ.ஓ திருமதி.இதயகனி அவர்கள் அவர்களது போனில் 9385244609 என்ற எண்ணில் இருந்து என்னை தொடர்பு கொண்டு நான் ஆன்லைனில் எனது மனைவி பெயரில் விண்ணப்பித்த மணி லென்டர்ஸ் உரிமம் புதுப்பித்தல் தொடர்பான ஸ்தல விசாரணைக்கு வந்திருப்பதாக சொல்லி மேற்படி பைனான்ஸ் முகவரியை கேட்டுவிட்டு அங்கு வந்தார். அப்போது வி.ஏ.ஓ-உடன் ஆர்.ஐ மற்றும் சேரன்மகாதேவியை சேர்ந்த வெங்கடேஷ் ஆகியோர்களும் வந்து இடத்தை நேரில் பார்வையிட்டு விசாரித்து சென்றனர். பின்னர் 01.06.2026 அன்று சுமார் 12.30 மணியளவில் அதே நம்பரில் இருந்து வி.ஏ.ஓ மீண்டும் எண்ணை தொடர்பு கொண்டு, சேரன்மகாதேவி ஆர்.ஐ ஆபீசுக்கு வரும்படி சொன்னார். அதன்படி உடனே நானும் ஆர்.ஐ ஆபீசுக்கு சென்று அங்கிருந்த வி.ஏ.ஓ-வை சந்தித்தபோது எனது மணைவி பெயரிலான பட்டா மாறுதல் தொடர்பான ஆவணங்களை எடுத்துக் கொண்டு மறுநாள் (02.06.2026) வரும்படி சொன்னார். அதன்படி நான் நேற்று 02.06.2026-ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் சேரன்மகாதேவி வி.ஏ.ஓ அலுவலகம் சென்ற போது அங்கிருந்த தலையாரி

அவர்கள் வி.ஏ.ஓ, சேரன்மகாதேவி ஆர்.ஐ அலுவலகத்தில் இருப்பதாக சொன்னார். அதன்படி நான் மதியம் சுமார் 12.30 மணியளவில் ஆர்.ஐ அலுவலகம் சென்று அங்கிருந்த வி.ஏ.ஓ-வை சந்தித்து எனது மனைவி பெயரிலான பட்டா மாறுதல் தொடர்பான ஆவணங்களை காண்பித்தேன். அவர் அதை பார்த்துவிட்டு அதில் பெயர் சம்பந்தப்பட்ட பிரச்சணை உள்ளது என்றும், மேல்அதிகாரியிடம் கலந்துவிட்டு பின்னர் சொல்கிறேன் என்றும் சொன்னார். பின்னர் நான் எனது மனைவி பெயரிலான மணி லென்டர் லைசென்ஸ் புதுப்பித்தல் தொடர்பான விண்ணப்பம் பற்றி கேட்டபோது அவர் அதனை ஏற்பாடு செய்து தர வேண்டுமானால் அவருக்கு பணம் ரூ.10,000/- லஞ்சமாக தர வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் என்னால் அவ்வளவு பணம் தரமுடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் எங்களுக்கு ஆபீசுக்கு செலவு அதிகமாக உள்ளது என்றும் மேல்அதிகாரிகளுக்கு கொடுக்க வேண்டியுள்ளது என்றும் சொல்லி அதனால் பணம் ரூ.10,000/- தந்தால்தான் மணி லென்டர் லைசென்ஸ் புதுப்பித்தலுக்கு ஏற்பாடு செய்து தர முடியும் என்று உறுதியாக சொல்லிவிட்டு நாளை (03.06.2026) பணம் ஏற்பாடு செய்து கொண்டுவரும்படி சொன்னார். நானும், வேறு வழியின்றி சரி என்று சொல்லிவிட்டு, மன வருத்தத்துடன் வெளியே வந்தேன். பின் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்த போது அரசு ஊழியர் தான் செய்யவேண்டிய வேலையை செய்வதற்கு லஞ்சமாக பணம் கேட்கிறாரே என்று என் மனம் சங்கடப்பட்டது. எனக்கு வி.ஏ.ஓ-வுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பமில்லை. எனவே புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்தேன். எனக்கு சரியாக எழுத படிக்க தெரியாததால் என் மனைவியிடம், நான் சொல்ல சொல்ல இந்த புகார் மனுவை எழுதி வாங்கி கொண்டு வந்துள்ளேன். மேலும் வி.ஏ.ஓ லஞ்சமாக கேட்ட பணம் ரூ.10,000-த்தை நான் வைத்துள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்கும் சேரன்மகாதேவி வி.ஏ.ஓ திருமதி.இதயகனி என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd இ.மூக்காண்டி 3/6/2026.

Sir, Received this complaint today on 03.06.2026 at 08.00 hrs, I have conducted confidential enquiry about the reputation of the accused and about the reliability and antecedents of the complainant and obtained oral permission from the Supdt. of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tirunelveli V&AC Cr.No.02/2026 u/s 7(a) of the Prevention of Corruption Amended Act, 2018 today on 03.06.2026 at 09.00 hrs. sd. D.Robin Gnanasingh, 3.6.2026 Inspector of Police, V&AC, Tirunelveli.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் வாதியின் அசல் புகார் மனுவை கனம் மாவட்ட முதன்மை நீதிபதி மற்றும் அமர்வு நீதிபதி, திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

3/6/26
Dy. SP